# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I
# DINDIGUL.

**C.C.No. 25/2024**

**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மலைச்சாமி | **Caste** | : | |
| **Father's Name** | : | ஜெயசீலன் | **Calling** | : | **சார்பு ஆய்வாளர்-நத்தம் காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **46** |
| | | | **Dated** | : | **06.03.2026.** |

**06.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 10 திரு. மலைச்சாமி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 9 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 ம் எதிரி ஆஜர்**

**2 ம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் தற்போது நத்தம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் நகர் மேற்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 27.08.2023 ம் தேதி 20 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது ஜாக்குலின் கிறிஷ்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை

பெற்று நிலைய குற்ற எண் 412/2023 U/s.392 IPC படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் குற்றவியல் நீதிமன்ற எண் 1 ற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த நேரம் மாலை 6 மணி என்றால் சரிதான். காவல் நிலையத்தில் தகவல் கொடுத்த நேரம் இரவு 8 மணி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் R.M காலணி மின்மயானம் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 200 மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். நடந்து வந்தால் சுமார் 10 நிமிடத்தில் வரமுடியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2 மணி நேரம் கழித்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமத்திற்கு காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.06 17:10:03 +0530

Judicial Magistrate No.I

Dindigul.